# மாணவர்
# கதைக் களஞ்சியம்



அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

# மாணவர் சிந்தனைக் கதைகள்

தொகுப்பாசிரியர்:
டாக்டர் இளங்கம்பன் M.Lit.
தமிழ்ப்பேராசிரியர், பழனி

Kalviulagu
TAMIIL EDUCATION WEB

ASHTRALUXUMI PUBLICATION

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்,
320, செட்டியார் தெரு,
கொழும்பு 11.
தொலைபேசி 334004, 331960


# பொருளடக்கம்



| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | கர்வம் கொண்ட குதிரை | 1 |
| 2. | குணம் கெட்ட கொக்கு | 4 |
| 3. | கர்வம் கொண்டவர் துன்பம் அடைவர் | 7 |
| 4. | சிங்கமும் பன்றியும் | 10 |
| 5. | வீண் பெருமை துன்பம் தரும் | 13 |
| 6. | பொறாமை ஆகாது | 15 |
| 7. | குரங்கும் பறவைகளும் | 18 |
| 8. | குரங்கும் முதலையும் | 21 |
| 9. | ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு | 24 |
| 10. | எல்லோரையும் திருப்தி செய்ய இயலாது | 26 |
| 11. | மூடத் தவளைகள் | 29 |
| 12. | நான்கு சகோதரர்கள் | 31 |
| 13. | கீரியின் நன்றி | 33 |
| 14. | இரண்டு நண்பர்கள் இராமுவும், சோமுவும் | 37 |
| 15. | புலியும் வழிப்போக்கனும் | 40 |
| 16. | சிங்கமும் நரியும் | 42 |
| 17. | குடியானவனும் நரியும் | 45 |
| 18. | ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் அழிவே | 47 |
| 19. | காகமும் பாம்பும் | 49 |
| 20. | ஒற்றுமையே வலிமை | 51 |
| 21. | குரங்கு அரசன் | 53 |
| 22. | கழுதையும் நிழலும் | 55 |
| 23. | கழுகும் காகமும் | 57 |
| 24. | ஓநாயும் கொக்கும் | 59 |
| 25. | குரங்கும் கழுதையும் | 60 |


www.kalviulagu.com

# 1. கர்வம் கொண்ட குதிரை

ஒரு வியாபாரியிடம் குதிரை ஒன்றும் பெரிய கழுதை ஒன்றும் இருந்தன. அவர் குதிரையைச் சவாரி செய்யவும், கழுதையை மூட்டை சுமக்கவும் உபயோகித்தார்.





ஒரு நாள், அருகிலுள்ள நகரத்திற்கு குதிரையையும் கழுதையையும் ஓட்டிச் சென்றார். கழுதையின் மேல் பெரிய பார மூட்டை ஒன்றை ஏற்றியிருந்தார். அதனால் கழுதை, பாரம் தாங்காமல் தள்ளாடித் தடுமாறி, சிரமத்துடன் நடந்து சென்றது. குதிரையோ தன் மேல் பாரம் எதுவுமில்லாமல் குதூகலத்துடன் நடந்து சென்றது.

www.kalviulagu.com

வழியில் குதிரை, கழுதையைப் பார்த்து நண்பனே! நீ, பெரிய பார மூட்டையுடன் வெகு சிரமத்துடன் நடந்து வருகிறாய். நானோ, பாரம் எதுவுமில்லாமல், சுகமாக நடந்து வருகிறேன் என்று கூறி ஏளனம் செய்தது.

சிறிது தூரம் சென்றதும் கழுதையால் நடக்க முடியவில்லை. அதனால் கீழே



படுத்தது. வியாபாரி பல வழிகளில் முயன்றும், கழுதை எழுந்திருக்கவில்லை. வேறு வழியின்றி வியாபாரி, கழுதையின் மேல் இருந்த பார முட்டையை எடுத்து, குதிரையின் முதுகில் ஏற்றினார். பாரம் குறைந்தவுடன், கழுதையும் எழுந்து நின்றது.

www.kalviulagu.com



பிறகு வியாபாரி இரண்டையும் ஓட்டிச் சென்றார். பாரம் முழுவதையும் குதிரை கடைசிவரை வெகு தூரம் சுமந்து செல்ல வேண்டியதாயிற்று. அதனால், அது வெகு துன்பப்பட்டது. தான் கழுதையை ஏளனம் செய்ததால் தனக்கு அக்கதி ஏற்பட்டது என்பதை உணர்ந்தது. அன்று முதல் கழுதையிடம் இரக்கத்துடன் நடந்து கொண்டது.

கேள்விகள்

1. குதிரை எதனால் கழுதையை ஏளனம் செய்தது?

2. கழுதைக்கு என்ன நேர்ந்தது?

3. எப்போது குதிரை கழுதையிடம் இரக்கத்துடன் நடந்து கொண்டது?

www.kalviulagu.com

# 2. குணம் கெட்ட கொக்கு

ஒரு பெரிய குளத்தில் நிறைய மீன்கள் இருந்தன.



அவைகளுடன் பெரிய நண்டு ஒன்றும் இருந்தது. தவிர பெரிய கொக்கு ஒன்றும் இருந்தது. இவைகள் நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஒன்றுக்கொன்று உதவி வந்தன.


ஒரு கடுங்கோடையில் அக்குளத்தில் நீர் வற்றியது. மீன்களும் நண்டும் அங்கிருக்க முடியாமல் தவித்தன. இதைக் கண்ட கொக்கு அவைகளுக்கு உதவி புரிவதாகச் சொல்லிற்று.

தனது அலகால் ஒவ்வொரு மீனாக கவ்விச் சென்று வேறு நீர் உள்ள குளத்திற்கு எடுத்துச் செல்வதாகச் சொல்லிற்று. அம்மாதிரி ஒவ்வொன்றாகக் கவ்விச்

www.kalviulagu.com

www.kalviulagu.com





சென்றது. ஆனால் அவைகளை வேறு குளத்திற்கு எடுத்துச் செல்லாமல் ஒருபாறையின் மேல் வைத்துக் கொன்று தின்று வந்தது. இவ்வாறு எல்லா மீன்களையும் கவ்வி எடுத்துச் சென்று கொன்று தின்றது.

நீர் வற்றின குளத்தில் கடைசியில் நண்டு மாத்திரம் இருந்தது. கொக்கிடம் நண்டு தன்னையும் காப்பாற்ற வேண்டியது நண்டையும் வேறு குளத்திற்கு எடுத்து செல்ல கொக்கு சம்மதித்தது. உடனே நண்டு கொக்கின் கழுத்தின் மேல் கவ்விப் பிடித்துக் கொண்டது. கொக்கும் பறந்து சென்றது.

www.kalviulagu.com





பாறையின் அருகே வரும்போது நண்டு கீழே பாறையிலிருந்த மீன்களின் செதில்களைக் கண்டது. அதற்குக் கொக்கின் தீச்செயல் விளங்கிற்று. உடனே சிறிதும் தாமதியாமல் தனது கூரிய கால்களால் கொக்கின் கழுத்தை அழுத்தி நொறுக்கியது. கொக்கும் மூச்சுத்திணறி கீழே விழுந்து இறந்தது. நண்டும் தப்பிச் சென்றது.

கேள்விகள்

1. மீன்களும், நண்டும் ஏன் வேறு குளத்திற்கு செல்ல விரும்பின?


2. கொக்கு எவ்வாறு உதவி செய்வதாக கூறிற்று?

3. நண்டு ஏன் கொக்கை கொன்றது?

www.kalviulagu.com

# 3. கர்வம் கொண்டவர் துன்பமே அடைவர்

காட்டில் ஒரு நாள் பெரிய பூனை ஒன்றும் நரியும் சந்தித்தன. அவை இரண்டும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தன.



அப்பொழுது நரி பூனையிடம், "நண்பரே! தந்திரத்திற்குப் பேர் போனவன் நான் என்னை எவரும் ஏமாற்ற முடியாது நான் எவ்விதத் தீங்கிலிருந்தும் தந்திரமாய் தப்புவேன்." என்று இறுமாப்புடன் கூறியது.

அதற்கு பூனை, "நண்பரே! தங்களைப் போல் பல தந்திரங்கள் எனக்குத் தெரியாது. சில

தந்திரங்கள் தான் தெரியும். தங்களைப் போல் சாமர்த்தியம் எனக்குக் கிடையாது" என்று அடக்கத்துடன் பதில் கூறியது.


பூனையைக் கண்டு நரி ஏளனமாய் "ஒன்றும் தெரியாத நீ எவ்வாறு ஆபத்திலிருந்து தப்புவாய்" என்று ஏளனம் செய்தது.

அச்சமயம் திடீரென்று அப்பக்கம் சில



வேட்டை நாய்கள் வந்தன. உடனே பூனை ஒரு பெரிய மரத்தின் மேல் ஏறிக்கொண்டது. ஆனால் நரியினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அங்கிருந்து ஓட ஆரம்பித்தது. ஆனால் வேட்டை

www.kalviulagu.com



நாய்கள் வேகமாய் ஓடித் தாவி நரியைப் பிடித்துக் கொன்றன. பூனையோ தப்பிப் பிழைத்தது. கர்வம் கொண்டவர் துன்பமே அடைவர்.

கேள்விகள்

1. நரி, பூனையை எவ்வாறு கேலி செய்தது?

2. எவ்வாறு பூனை ஆபத்திலிருந்து தப்பியது?

www.kalviulagu.com

# 4. சிங்கமும் பன்றியும்

ஒரு காட்டில் நிறைய மிருகங்கள் இருந்தன. அவை தமக்கு ஒரு தலைவனை ஏற்படுத்த நினைத்தன.




எல்லா மிருகங்களும் ஓரிடத்தில் ஒரு நாள் கூடின. உடல் வலிமை, வீரம், பெருந்தன்மை முதலிய பல குணங்கள் பொருந்திய சிங்கத்தைத் தமது தலைவனாகத் தேர்ந்தெடுத்தன.

அங்குக் கூடியிருந்த காட்டுப் பன்றி ஒன்று மாத்திரம் சிங்கம் தலைவனாக இருப்பதை விரும்பவில்லை. சிங்கத்தினிடம் வெறுப்புடன் இருந்தது. சில நாட்கள் கழித்து ஒரு நாள்

www.kalviulagu.com

அப்பன்றியும் தலைவன் சிங்கமும் சந்தித்தன. இரண்டும் வெகுநேரம் பேசிக் கொண்டன.



பன்றி சிங்கத்தைப் பார்த்து, எனது குடும்பம் எவ்வளவு பெரியது பார்த்தீரா? எனக்கு எத்தனை குட்டிகள் ஆனால் உமக்கு இருப்பது ஒரே ஒரு குட்டிதான் என்று ஏளனம் செய்தது?

அதற்குச் சிங்கம், தாங்கள் பல குட்டிகள் பெற்று என்ன நன்மை எனது ஒரு குட்டிக்கு இணையாகுமா? சிங்கக் குட்டியல்லவா?

www.kalviulagu.com



அதனுடைய பலமும் வீரமும் உனது குட்டிகளுக்கு வருமா? எனது குட்டி கர்ஜித்தால் உனது குட்டிகள் எல்லாம் ஓடி ஒளியும் என்று பதில் கூறிற்று. பன்றியும் ஒன்றும் பதில் பேச முடியாமல் அவ்விடம் விட்டுச் சென்றது.

கேள்விகள்

1. காட்டு மிருகங்கள் எதனால் சிங்கத்தை தலைவனாக தேர்ந்தெடுத்தன?


2. பன்றி சிங்கத்தை எவ்வாறு கேலி செய்தது?

3. பன்றிக்கு சிங்கம் சொன்ன பதில் என்ன?

www.kalviulagu.com

# 5. வீண் பெருமை துன்பம் தரும்

ஒரு காட்டின் அருகில் கழுதை மேய்ந்து கொண்டிருந்தது. அருகில் இருந்த குடிசையில் பெரிய சேவல் ஒன்று இருந்தது. அதுவும் இரைதேடி அலைந்து கொண்டிருந்தது. திடீரென்று அங்கு ஒரு சிங்கம் வந்தது. சிங்கத்தைக் கண்ட சேவலும் கழுதையும் மிரண்டு பலமாகக் கூவின.



சிங்கத்திற்கு கழுதையின் குரல் பிடித்தல்ல. ஆனால் அச்சிங்கம் சேவலின் கூவல் கேட்டதில்லை. அதனால் அது பயந்து அங்கிருந்து திரும்பி ஓட ஆரம்பித்தது.

www.kalviulagu.com

சிங்கம் ஓடுவதைக் கண்ட கழுதை தன் குரலைக் கேட்டுத்தான் சிங்கம் ஓடுவதாக நினைத்தது. தன்னைப்பற்றி பெருமையாக எண்ணிக் கொண்டது. தனக்கு அதிக பலம் இருப்பதாக நினைத்தது. உடனே சிங்கத்தைத் துரத்திக் கொண்டு ஓடிற்று.

சிறிது தூரம் சென்றதும் சிங்கம் திரும்பிப் பார்த்தது. கழுதை தூரத்தில் ஓடிவருவதைக் கண்டது. அருகில் சேவலைக் காணவில்லை. அதனால் அதன் பயம் நீங்கிற்று. திரும்ப ஓடி வந்து கழுதையின்மேல் பாய்ந்து அதை கொன்று தின்றது.

கேள்விகள்

1. சிங்கம் எதனால் பயந்து ஓடிற்று?

2. கழுதை என்ன நினைத்து சிங்கத்தை துரத்தியது?

3. கழுதைக்கு என்ன நேர்ந்தது?

www.kalviulagu.com

# 6. பொறாமை ஆகாது

ஒரு வியாபாரியிடம் கழுதை ஒன்றும் பெரிய நாய் ஒன்றும் இருந்தன. கழுதையை மூட்டைகளை ஏற்றிச் செல்ல உபயோகித்து வந்தார். நாய் வீட்டை பாதுகாத்து வந்தது நாய்க்கு நல்ல உணவு கொடுத்து அன்புடன் வளர்த்து வந்தார். அதுவும் அடிக்கடி அவருடன் கொஞ்சி விளையாடுவது வழக்கம்.



www.kalviulagu.com

இதைக் கண்ட கழுதைக்கு நாயின் மேல் பொறாமை ஏற்பட்டது. தானும் வியாபாரியிடம் கொஞ்சி விளையாட நிச்சயித்தது.

ஒரு நாள் மாலை வழக்கம் போல் வியாபாரி வீடு திரும்பி வந்தார். நாயும் தாவிக்குதித்து அவரிடம் சென்று அன்புடன் விளையாடிற்று. அவரும் அதனுடன் கொஞ்சி விளையாடினார்.



சிறிது நேரம் கழித்து வியாபாரி களைப்புடன் ஒரு நாற்காலியில் அமர்ந்தார். அது தான் சமயம் என்று எண்ணிய கழுதை அவருடன் கொஞ்சி விளையாட நினைத்து பாய்ந்து சென்று அவரின்

www.kalviulagu.com

மார்பின் மேல் தனது கால்களை வைத்தது. இது கண்டு பயந்து வியாபாரி கழுதை தன்னைக் கடிக்க வருவதாக நினைத்தார். உடனே அருகிலிருந்த பெரிய கழியால் கழுதையை நையப் புடைத்து வெளியில் துரத்தினார்.



கழுதையும் தனக்கு நேர்ந்த கதியை நினைத்து வருந்தியது. அன்று முதல் நாயின் மேல் இருந்த பொறாமையை விட்டது.

கேள்விகள்

1. நாயின் மேல் கழுதைக்கு ஏன் பொறாமை ஏற்பட்டது?

2. கழுதை வியாபாரியிடம் எவ்வாறு நடந்து கொண்டது?

3. வியாபாரி கழுதையை என்ன செய்தார்?

www.kalviulagu.com

# 7. குரங்கும் பறவைகளும்

ஒரு பெரிய மரத்தில் நிறைய பறவைகள் கூடுகட்டி வசித்து வந்தன.

ஒரு நாள் அங்கு பெரிய மழை பெய்ய ஆரம்பித்தது. வெகு நேரம் விடாமல் மழை பெய்தது.



அச்சமயம் பெரிய குரங்கு ஒன்று மழையில் நனைந்து தவித்து தத்தளித்து அவதிப்பட்டது. அம்மரத்திற்கு வந்து உட்கார்ந்தது. சிறிது மழையும் ஒய்ந்து நின்றது.

www.kalviulagu.com

குரங்கைக்கண்டு பறவைகள் அலறிப் புடைத்தன. குரங்கும் பேசாமல் இருந்தது. அப் பறவைகள் குரங்கைப் பார்த்து பெரிய மிருகமான உன்னால் ஒரு கூடுகட்டி



வாழ முடியாமல் தவிக்கிறாய். மழையில் அவதிப்படுகிறாய். சிறிய பறவைகளாகிய நாங்கள் கூடுகட்டி சுகமாக வாழ்கிறோம் என்று கூறி இகழ்ந்தன. குரங்கும் ஒன்றும் செய்யாமல் இருந்தது. ஆனால் பறவைகள் குரங்கை விடாமல் எள்ளி நகையாடிக் கொண்டிருந்தன.

சிறிது நேரத்தில் குரங்கும் பொறுமை இழந்தது. உடனே மரத்தின் மேல் தாவிச் சென்று பறவைகளின்

www.kalviulagu.com

கூடுகளைப் பிரித்து எறிந்து நாசம் செய்தது. பறவைகளும் அங்கு இருக்க முடியாமல் பறந்து வேறிடம் சென்றன.



ஆகையால் எப்பொழுதும் பிறரின் துன்பத்தைக் கண்டு எள்ளி நகையாடக் கூடாது.

கேள்விகள்

1. பறவைகள் குரங்கை என்ன கூறி இகழ்ந்தன?

2. குரங்கு ஏன் பொறுமை இழந்தது?

3. பறவைகள் ஏன் வேறிடம் சென்றன?

4. இக்கதையின் நீதி என்ன?

www.kalviulagu.com

# 8. குரங்கும் முதலையும்

## நம்பினோரை ஏமாற்றக்கூடாது

ஒரு பெரிய ஏரியில் நிறைய முதலைகள் இருந்தன. அந்த ஏரிக்கரையில் ஒரு பெரிய மரத்தில் குரங்கு ஒன்று வசித்து வந்தது. ஒரு ஆண் முதலையும், குரங்கும் மிகுந்த நண்பர்களாயின. அம்முதலை தினமும் அம்மரத்தடிக்கு வந்து குரங்குடன் உரையாடிக் கொண்டிருந்து விட்டுச் செல்லும். இவ்வாறு பல நாட்கள் நடந்து வந்தது.



அம் முதலை தன் மனைவியுடன் அவ்வேரியின் நடுவில் ஒரு சிறு தீவில் வசித்து வந்தது. ஒரு நாள் ஆண் முதலையுடன் பெண்முதலையும் மரத்தடிக்கு வந்தது. அங்கு குரங்குடன் ஆண் முதலை பேசுவதையும் அவர்களது சிநேகத் தன்மையையும் கண்டது.

www.kalviulagu.com

அப்பெண் முதலை குரங்கின் ஈரலை உண்ண வெகுநாட்களாக ஆவலாக இருந்தது. முதலை இரண்டும் தமது இருப்பிடம் திரும்பின. அங்கு சென்றதும் பெண்முதலை ஆண் முதலையிடம் "எனக்கு வெகுநாட்களாய் குரங்கின் ஈரலை உண்ண ஆவல். அதனால் எப்படியாவது உனது நண்பன் குரங்கை இங்கு அழைத்து வந்தால் நாம் இருவரும் அதன் ஈரலை உண்ணலாம்" என்றது.

இது கேட்ட ஆண் முதலை தனது நண்பனுக்குத் தீங்கு விளைவிக்க உடன் படவில்லை. அதனால் அது முடியாது என்று கூறியது. உடனே பெண் முதலை தனக்கு குரங்கின் ஈரல் கிடைக்க வில்லையென்றால் உயிரை விட்டு விடுவதாகப் பயமுறுத்தியது. வேறு வழியின்றி ஆண் முதலை குரங்கைக் கூட்டி வரச் சம்மதித்தது.

மறு நாட்காலை மரத்தடிக்கு வழக்கம் போல் சென்றது. குரங்கிடம், "இன்று என் மனைவி உனக்கு விருந்து வைக்க நினைத்திருக்கிறாள். அதனால் தாங்கள் என் முதுகில் ஏறிக்கொண்டு என்னுடன் எமது இருப்பிடம் வந்தால் நாம் விருந்து உண்டு திரும்பலாம்" என்றது. முதலில் குரங்கிற்கு முதலையுடன் செல்ல விருப்பம் இல்லை. ஆனால் முதலை குரங்கை வற்புறுத்தி அழைத்துச் சென்றது. குரங்கு முதலையின் முதுகில் உட்கார்ந்து கொண்டது. முதலை தண்ணீரில் நீந்திச் சென்றது.

இரண்டும் போய்க் கொண்டிருக்கும் போது

www.kalviulagu.com

முதலை குரங்கிடம், "தங்களை எதற்குக் கூட்டிச் செல்கின்றேன் தெரியுமா? எனது மனைவி தங்களது ஈரலை உண்ண வெகு ஆவலுடன் இருக்கிறாள். அதற்குத் தான் தங்களை எனது இருப்பிடம் அழைத்துச் செல்கிறேன்" என்றது.

இது கேட்ட குரங்கு உடனே முதலையிடம் சாதுரியமாக, "நண்பரே! இதைத் தாங்கள் மரத்தடியிலேயே கூறியிருக்கக்கூடாதா? எனது ஈரலை அம்மரத்தில் உலர்த்தியிருக்கின்றேன். தாங்கள் அங்கு கூறியிருந்தால் அதை எடுத்து வந்திருக்கலாம்" என்றது.

குரங்கின் வார்த்தைகளை நம்பிய முதலை உடனே குரங்குடன் திரும்ப மரத்தடிக்கு வந்தது. அங்கு வந்து சேர்ந்ததும் குரங்கு தாவி மரத்தில் ஏறிக் கொண்டது உடனே முதலையிடம் தாங்கள் இவ்வாறு நம்பிக்கைத் துரோகம் செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. தங்களுடன் வந்து உயிர் துறக்க விரும்பவில்லை, என்றது. இது கேட்ட முதலை தனது முட்டாள் தனத்தை நினைத்து வருந்தியது.

கேள்விகள்

1. பெண் முதலையின் விருப்பம் என்ன?

2. குரங்கு எவ்வாறு சாதுரியமாக முதலையிடம் இருந்து தப்பியது?

www.kalviulagu.com

# 9. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

ஒரு பெரிய மரத்தில் நிறையப் பறவைகள் வசித்து வந்தன. அவைகள் எப்பொழுதும் ஒன்று கூடியே இரைதேட வெளியே சென்று திரும்பும்.

ஒரு நாள் காலை அவைகள் இரை தேடி புறப்பட்டு சென்றன. வழியில் ஒரு பெரிய வலை விரித்திருப்பதைக் கண்டன. அதில் நிறைய தானியங்கள் நிறைந்து கிடந்தன. அதைக் கண்ட பறவைகள் அத்தானியங்களை தின்ன நினைத்தன. ஆனால் அவைகளில் வயதான பறவை ஒன்று மற்றப் பறவைகளைப் பார்த்து, இது நம்மைப் பிடிக்க விரிக்கப்பட்டிருக்கும் வலை. நாம் தானியங்களை தின்ன இறங்கினால் வலையில் அகப்பட்டுக் கொள்வது நிச்சயம். பிறகு நாம் தப்ப முடியாது என்று கூறி எச்சரித்தது. ஆனால் மற்றப் பறவைகள் இதைப் பொருட்படுத்தவில்லை. எல்லாப் பறவைகளும் தானியங்கள் இறைத்த வலையின் மேல் இறங்கின. வேறு வழியன்றி அவ்வயதான பறவையும் கூடவே இறங்கிற்று. எல்லாப் பறவைகளும் அவ்வலையில் சிக்கிக் கொண்டன. பலவாறு முயன்றும் அவைகளால் தப்பி வெளிவர முடியவில்லை. வருத்தத்துடன் அயர்ந்து நின்றன.

அச்சமயம் அவ்வயதான பறவை மற்ற பறவைகளிடம், இப்பொழுது நாம் வேடனிடமிருந்து

www.kalviulagu.com

தப்பிப்பிழைக்க ஒரு வழிதான் உண்டு. நாம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாய் வலையுடன் பறந்து செல்ல வேண்டும். வெகுதூரம் பறந்து சென்று தப்ப வேண்டும் என்றது, இதை எல்லாப் பறவைகளும் ஆமோதித்தன.

உடனே எல்லாப் பறவைகளும் ஒரே சமயத்தில் வலையுடன் பறந்து மேலே சென்றன. இதைக் கண்ட வேடன் அவைகளை துரத்தி ஓடினான். ஆனால் பறவைகள் வெகுதூரம் பறந்துசென்று மறைந்தன. வேடனும் அயர்ந்து நின்றான்.

பறவைகள் வலையுடன் தமது மரத்தடியில் இறங்கின. அம்மரத்தடியின் பொந்தில் எலிகள் வசித்து வந்தன. அவை அப்பறவைகளின் நண்பர்கள். அதனால் அவ்வெலிகள் வலையில் சிக்குண்டு தவிக்கும் பறவைகளைக் கண்டன. உடனே தமது பற்களால் வலையைப் பல இடங்களில் கடித்துத் துண்டாக்கின. எல்லாப் பறவைகளும் தப்பி வெளி வந்தன.

அன்று முதல் அவ்வயதான பறவையின் சொற்படியே நடந்து வந்தன.

### கேள்விகள்

1. நிறைய தானியங்களை கண்ட பறவைகளை வயதான பறவை என்ன சொல்லி எச்சரித்தது?

2. வலையிலிருந்து எவ்வாறு அப்பறவைகள் தப்பின?

www.kalviulagu.com

# 10.எல்லோரையும் திருப்தி செய்ய இயலாது

ஓர் ஊரில் வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் தனது மூட்டைகளை ஏற்றிவர கழுதை ஒன்று வைத்திருந்தான். சில வருடங்களுக்குப் பின் அக்கழுதைக்கு வயது அதிகம் ஆனதால் வழக்கம் போல் மூட்டைகளைச் சுமந்து நடந்து செல்ல முடியவில்லை. அதனால் வியாபாரி அக்கழுதையை விற்று விட நிச்சயித்தான்.

அருகிலுள்ள நகரத்தில் வாரந்தோறும் கால்நடைச் சந்தை கூடுவது உண்டு. அதில் கழுதையை விற்று வர ஒரு நாள் காலையில் கழுதையை ஓட்டிச் சென்றான். அவனுடன் கூட அவனது பன்னிரண்டு வயது மகனும் சென்றான். இருவரும் கழுதையுடன் நடந்து சென்றனர்.

வழியில் சிலர் இவர்களைக் கண்டனர். அவர்கள் வியாபாரியிடம், ஐயா! குழந்தையை நடத்தி அழைத்துச் செல்கிறீர்களே? கழுதையின் மேல் உட்கார்த்தி அழைத்துச் செல்லக் கூடாதா? என்றனர். உடனே வியாபாரி தனது மகனை கழுதையின் மேல் ஏற்றி ஓட்டிச் சென்றான்.

சிறிது தூரம் சென்றதும் வேறு சிலர் பையனைப் பார்த்து, சிறு பையனாகிய நீ கழுதை

www.kalviulagu.com

மேல் சவாரி செய்கிறாய். வயது முதிர்ந்த பெரியவர் நடந்து வருகிறார் என்று இகழ்ந்தனர். உடனே வியாபாரி தான் கழுதை மேல் ஏறிக் கொண்டபின், பையன் அருகில் நடந்து சென்றான்.

வழியில் இவர்களைக் கண்ட சிலர், என்ன ஐயா அநியாயம்? சிறு குழந்தை நடந்து செல்கிறது. பெரிய மனிதன் கழுதையின் மேல் ஏறிச் செல்கிறான் என்று பரிகாசித்தனர். உடனே வியாபாரியும் மகனும் இருவரும் கழுதையின் மேல் ஏறி ஓட்டிச் சென்றனர். கழுதையும் வெகு சிரமத்துடன் தள்ளாடி நடந்து சென்றது. இது கண்ட சிலர், என்ன ஐயா! உமக்கு அறிவில்லையா? வாயில்லாப் பிராணியின்மேல் இருவரும் உட்கார்ந்தால் அது எப்படி நடந்து செல்லும் என்று இரைந்தனர்.

உடனே இருவரும் இறங்கி நடந்தனர். ஆனால் கழுதை அயர்ந்து படுத்துக் கொண்டது. எவ்வளவு முயன்றும் எழுந்திருக்கவில்லை. வேறு வழியின்றி வியாபாரியும் அவரது மகனும் ஒரு மூங்கில் கழியில் கழுதையை தலைகீழாகக் கட்டித் தொங்க விட்டன. அதை இருவருமாக சிரமத்துடன்; சுமந்து நடந்து சென்றனர். வழியில் ஓர் ஆற்றுப் பாலத்தின் மேல் சென்றனர். அச்சமயம் திடீரென்று கழுதை வெகுண்டு உதறி கட்டுகளை அறுத்துக் கொண்டு ஆற்று நீரில் விழுந்தது. ஆற்று நீரால் அடித்துச் செல்லப்பட்டது.

www.kalviulagu.com

வியாபாரியும் மகனும் உள்ளதையும் இழந்து வருத்தத்துடன் வீடு திரும்பினர். வியாபாரி இவ்வுலகில் எல்லோரையும் திருப்தி செய்து ஒரு காரியம் செய்ய இயலாது என்று தீர்மானித்தான்.

### கேள்விகள்

1. வியாபாரி எதற்காக கழுதையை சந்தைக்கு கொண்டு சென்றான்?

2. முதலில் சிலர் வியாபாரியை பார்த்து என்ன கூறினர்?

3. இரண்டாவதாக சிலர் பையனைப் பார்த்து என்ன கூறினர்?

4. வியாபாரியும் பையனும் கழுதையின் மேல் உட்கார்ந்து ஓட்டிச் செல்லும் போது, சிலர் என்ன கூறினர்?

5. முடிவில் கழுதை என்னவாயிற்று?

www.kalviulagu.com

# 11. மூடத் தவளைகள்

ஒரு குளத்தில் நிறையத்தவளைகள் வசித்து வந்தன. அக்குளத்தில் மீன்கள் அதிகம் இருந்தன. அதனால் அத் தவளைகளுக்கு குறைவின்றி ஆகாரம் கிடைத்து வந்தது. அவைகள் அங்கு சுகமே காலங்கழித்து வந்தன.

சில காலம் கழித்து அவைகள் தமக்கு ஒரு தலைவன் வேண்டுமென்று நினைத்தன. அதற்கு அவைகள் தமக்குள் பலமாக சண்டையிட்டுக் கொண்டன. அருகிலிருந்த வனதேவதை ஒன்று தவளைகளின் சண்டையைக் கவனித்தது, அவைகளிடம் வந்து சண்டையின் காரணம் கேட்டு அறிந்தது. அத்தவளைகளுக்குத் தகுந்த தலைவன் தருவதாக வாக்களித்தது.

உடனே அக்குளத்தில் பெரிய மரக்கட்டை ஒன்று தொப்பென்று வந்து விழுந்தது. தவளைகள் தமக்குச் சரியான தலைவன் கிடைத்துவிட்டதாக நினைத்தன தாவிக் குதித்து கும்மாளமிட்டன. அம்மரத்தின்மேல் ஏறி விளையாடின. ஆனால் அம்மரம் ஆடாமல் அசையாமல் மிதந்து இருந்தது. அதனால் சில நாட்களில் தவளைகள் அம்மரத்தின் மேல் வெறுப்புற்றன. மறுபடியும் தமக்குள் பலமாகச் சண்டையிடத் தொடங்கின.

இது கண்ட வனதேவதை தவளைகளிடம்

www.kalviulagu.com

வந்து விவரம் கேட்டது. அத்தவளைகள், "இத் தலைவனுக்கு உயிரில்லை. எதுவும் செய்யாமல் சும்மா இருக்கிறார். எமக்கு வேறு உயிருள்ள சுறுசுறுப்பான நல்ல தலைவன் வேண்டும்" எனக் கூறியன. வனதேவதையும் ஒப்புக் கொண்டது.

சிறிது நேரத்தில் அக்குளத்தில் பெரிய கொக்கு ஒன்று பறந்து வந்தது. வந்ததும் அத்தவளைகளைக் கொத்தித் தின்ன ஆரம்பித்தது. அது கண்ட தவளைகள் பயந்து ஓடி ஒளிந்து கொண்டன. ஆனால் சில நாட்களில் கொக்கு நிறையத் தவளைகளைக் கொன்று தின்றது. மீதமிருந்த சில தவளைகள் பயந்து வேறுவழியின்றி அவ்விடமிருந்து வேறு நீருள்ள இடத்திற்குச் சென்று வசித்தன. அன்று முதல் தலைவன் வேண்டும் என்ற எண்ணத்தை விட்டன.

கேள்விகள்

1. வனதேவதையிடம் தவளைகள் என்ன கேட்டன?

2. மரக்கட்டையின் மீது தவளைகள் ஏன் வெறுப்புற்றன?

3. ஏன் தவளைகள் வேறு நீருள்ள இடத்திற்கு சென்றன?

www.kalviulagu.com

# 12. நான்கு சகோதரர்கள்

ஒரு ஏழைக் குடியானவனுக்கு நான்கு குமாரர்கள் இருந்தனர். அவருக்குப் போதுமான வருமானம் இல்லாததால் அவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. அதனால் அவர்களை ஏதேனும் தொழில் செய்து சம்பாதித்து வர அருகிலுள்ள ஊர்களுக்கு அனுப்பினார்.

அவர்கள் நால்வரும் வெளியூர் புறப்பட்டுச் சென்றனர். பல ஊர்களிலும் சுற்றி அலைந்து கடைசியில் ஒரு கிராமத்தை அடைந்தனர். அங்கு வயது முதிர்ந்த ஒருவரைச் சந்தித்தனர். அவரிடம் வேலை கேட்டனர். ஆனால் அப்பெரியவர் அவர்களிடம், "என்னிடம் வேலை எதுவும் இல்லை. ஆனால் எனக்குத் தெரிந்துள்ள பல கலைகளை உங்களுக்குக் கற்றுத் தருகிறேன். அதைக் கொண்டு நீங்கள் பிழைத்துக் கொள்ளுங்கள்" என்றார். நால்வரும் சம்மதித்தனர்.

அன்றுமுதல் அப்பெரியவருடன் இருந்து பல கலைகளைக் கற்றனர். சில நாட்கள் கழித்து அப்பெரியவர் அவர்களிடம் இனி நீங்கள் வேறிடம் சென்று உமது சாமர்த்தியத்தால் பிழைத்துக் கொள்ளுங்கள் என்றார். அவர்களும் புறப்பட்டுச் சென்றனர்.

அவர்களில் மூத்த மூவரும் சிறிது கர்வத்துடன் இருந்தனர். தங்களுக்கு பல கலைகள் தெரிந்ததை நினைத்து இறுமாப்புடன் இருந்தனர். ஆனால்

www.kalviulagu.com

கடைசி சகோதரன் சிறிது புத்திக் கூர்மையுள்ளவன். அவன் சிறிது அடக்கத்துடன் இருந்தான்.

வழியில் அவர்கள் ஒரு காட்டைக் கடக்க நேர்ந்தது. ஓரிடத்தில் ஒரு சிங்கத்தின் எலும்புகள் சிதறிக் கிடப்பதைக் கண்டனர். உடனே மூத்த மூவரும் தமது கலைகளின் திறனைச் சோதிக்க தீர்மானித்தனர். ஆனால் நான்காவது பையன் அவர்களை எச்சரித்தான். சிங்கத்திற்கு உயிர் கொடுத்தால் முதலில் நம்மையே அது அடித்துக் கொல்லும் என்று கூறினான். அம் மூவரும் அவனது வார்த்தைகளைப் பொருட்படுத்தாமல் தமது வேலையில் இறங்கினர். நான்காமவன் வேகமாய் ஓடி அருகிலிருந்த மரத்தின் மேல் ஏறிக் கொண்டான்.

முதல்வன் அவ்வெலும்புகளை ஒழுங்காக அடுக்கினான். இரண்டாமவன் அதற்குச்சதையும் உடம்பும் உண்டாகச் செய்தான். மூன்றாமவன் அதற்கு உயிர் கொடுத்தான். அவர்கள் இக்கலைகளில் நன்கு தேர்ச்சி அடைந்திருந்தனர். அதனால் அச்சிங்கம் உடனே உயிர் பெற்று எழுந்தது. எதிரில் இருந்த மூவரையும் அடித்துக்கொன்றது. பிறகு அங்கிருந்து சென்றது. இது கண்ட நான்காமவன் வருத்தமுற்று மரத்திலிருந்து கீழே இறங்கினான். தன் ஊர் அடைந்து தகப்பனாரிடம் நடந்தவற்றை கூறினான்.

ஆராயாமல் செய்த காரியம் ஆபத்தில் முடியும்.

www.kalviulagu.com

# 13. கீரியின் நன்றி

ஒரு கிராமத்தில் குடியானவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு நான்கு குழந்தைகள் இருந்தனர். அவனுக்கு நிறைய வயல்கள் இருந்தன. மூத்த பையனுக்கு வயது பதினைந்து. அடுத்த பையனுக்கு வயது பதின்மூன்று. அவர்கள் இருவரும் வயலில் வேலை செய்து அவனுக்கு உதவி புரிந்தனர். அடுத்த பெண்ணிற்கு வயது பத்து. அப்பெண் தாய்க்கு வீட்டு வேலையில் உதவி வந்தாள். நான்காவது பெண் கைக் குழந்தை. அதற்கு வயது ஒன்று.

தினமும் காலையில் குடியானவனும் அவனது இரு குமாரர்களும் வயலுக்கு சென்று விடுவர்.

அவனது மனைவியும் மகளும் வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தனர்.

அவர்களிடம் ஒரு கீரிப் பிள்ளை இருந்தது. அதை அவர்கள் மிக்க அன்புடன் வளர்த்து வந்தனர். அதுவும் அவர்களிடம் நன்றியுடன் இருந்தது.

குடியானவனது வீட்டின்பின்புறம் பெரிய தோட்டம் இருந்தது. அதில் நிறையப் பாம்புகள் இருந்தன. அவைகளுக்கு தலைமையில் பெரிய நாகப்பாம்பு ஒன்று இருந்தது.

www.kalviulagu.com

கீரிப்பிள்ளை அடிக்கடி தோட்டத்திற்குச் சென்று பாம்புகளை விரட்டிக் கொன்றது. அதனால் அங்குள்ள பாம்புகள் பயத்துடன் இருந்தன. எவ்வகையிலேனும் கீரிப்பிள்ளையைக் கொல்ல நினைத்தன.

ஒரு நாள் காலையில் குடியானவனும், இரு மகன்களும் வயலுக்குப் புறப்பட்டுச் சென்றனர். குடியானவனது மனைவி தண்ணீர் எடுத்து வர மண்குடத்துடன் அருகிலுள்ள ஏரிக்கு சென்றிருந்தாள். அவளது மகளும் அவளுடன் சென்றாள். கைக் குழந்தை தாழ்வாரத்தில் ஏணையில் வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்தது. கீரிப்பிள்ளை அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது.

இதுதான் கீரியைத்தாக்கத் தக்க சமயம் என்று எண்ணிய நாகப் பாம்பு பின் வாயில் வழியாக வீட்டினுள் மெதுவாக நுழைந்தது. கீரியும் இதைக் கவனித்தது. உடனே கீரி நாகப் பாம்பின் மேல் பாய்ந்தது. இரண்டும் வெகு நேரம் சண்டையிட்டன. கடைசியில் கீரி நாகப்பாம்பை துண்டு துண்டாகக் கடித்துக் கொன்றது. அதனால் அதன் உடல் முழுவதும் இரத்தக்கறை ஏற்பட்டது.

பிறகு கீரி வாசலில் வந்து நின்றது. குடியானவனது மனைவியும் மகளும் தலையில் தண்ணீர் குடத்துடன் வீட்டிற்கு வந்தனர்.

www.kalviulagu.com

குடியானவனது மனைவி வீட்டு வாயிலில் கீரிப்பிள்ளையைக் கண்டாள். அதன் உடல் முழுவதும் இரத்தக் கறை இருப்பதைப் பார்த்து திடுக்கிட்டாள். தன் குழந்தையைத்தான் கீரி கடித்து விட்டதோ என்று நினைத்தாள். ஆனால் எதுவும் செய்யாமல் மெதுவாக உள்ளே சென்றாள். கீரியும் அவளுடன் கூட உள்ளே சென்றது. ஏணையில் குழந்தை நன்றாய் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அருகில் கீழே நாகப்பாம்பு பல துண்டங்களாக கிடப்பதையும் கண்டாள். உடனே அவளுக்கு நடந்தது விளங்கிற்று. மிகுந்த ஆச்சரியமுற்றாள். கீரி தன் குழந்தையை பாம்பினிடமிருந்து காப்பாற்றியது தெரிந்தது.

குடியானவன் வயலிலிருந்து திரும்பியதும் அவனிடம் அவனது மனைவி நடந்த விவரம் முழுவதும் கூறினாள். அவனும் கீரியின் செய்கையை நினைத்து ஆச்சரியப்பட்டான். அன்று முதல் அவர்கள் கீரிப்பிள்ளையை மிக்க அன்புடன் வளர்த்து வந்தனர். தோட்டத்தில் இருந்த எல்லா பாம்புகளும் கீரிப்பிள்ளைக்கு பயந்து அவ்விடம் விட்டு வெளியேறி வேறிடம் சென்றன.

www.kalviulagu.com

## கேள்விகள்

1, ஏன் நான்காவது சகோதரன் தன் மூத்த சகோதரர்களை எச்சரித்தான்?

2, மூன்று சகோதரர்களும் எவ்வாறு தாங்கள் கற்ற வித்தையை செய்து காட்டினர்?

3, எவ்வாறு நான்காவது சகோதரன் பிழைத்தான்?

## கேள்விகள்

1, எதனால் நாகப்பாம்பு கீரியை கொல்ல நினைத்தது?

2. கீரியைப் பார்த்ததும் குடியானவனின் மனைவி என்ன நினைத்தாள்?

3, அவள் ஏன் ஆச்சரியப்பட்டாள்?

www.kalviulagu.com

# 14. இரண்டு நண்பர்கள் இராமுவும், சோமுவும்

இராமுவும் சோமுவும் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் எக்காரியத்தையும் சேர்ந்தே செய்து வந்தனர்.

ஒரு நாள் அவர்கள் இருவரும் அவசர வேலையாக அருகிலுள்ள நகரத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. இருவரும் காலையில் தங்கள் கிராமத்திலிருந்து புறப்பட்டு நடந்து சென்றனர். நகரத்தில் வேலையை முடித்துக் கொண்டு திரும்ப வெகு நேரம் ஆகிவிட்டது. வழியில் ஓர் அடர்ந்த காட்டைக் கடந்து வர வேண்டியிருந்தது. அக்காட்டில் நிறையக் கரடிகள் இருந்தன.

அவர்கள் இருவரும் அக்காட்டைக் கடக்கும் போது மாலை நேரம் ஆகி விட்டது. திடீரென்று ஒரு புதரிலிருந்து பெரிய கரடி ஒன்று வெளியே வந்தது. அதைக் கண்டதும் அவ்விருவரும் பயந்து நடுங்கி என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றனர்.

சோமுவுக்கு மரம் ஏறத் தெரியும் அதனால் அவன் உடனே இராமுவைக் கவனியாமல் வேகமாய் ஓடி அருகிலிருந்த பெரிய மரத்தில் ஏறிப்பதுங்கிக் கொண்டான். இராமுவுக்கு மரம் ஏறத்தெரியாது. என்ன செய்வது என்று தெரியாமல் நின்றான்.

www.kalviulagu.com

திடீரென்று அவனுக்கு ஓர் உபாயம் உதித்தது. மூச்சை அடக்கிக் கொண்டு தரையில் காலை நீட்டி, மல்லாந்து படுத்துக் கொண்டான். அவர்களைக் கண்ட கரடி ஓடி வந்தது. இராமுவை நெருங்கி, அவனைச் சுற்றி வந்து முகர்ந்து பார்த்தது. அவன் இறந்து விட்டதாக நினைதது அவனை ஒன்றும் செய்யாமல் சென்றது.




கரடி சென்றதும் சோமு மரத்திலிருந்து கீழிறங்கி வந்தான். இராமுவும் எழுந்து நின்றான். சோமு இராமுவைப்பார்த்து கேலியாக கரடி உன் காதில் என்ன இரகசியம் கூறிற்று? என்றான். உடனே இராமு ஆபத்தில் உதவாமல் கைவிடும் நண்பர்களுடன் பழகாதே என்று சொல்லிற்று என்றான். சோமுவும் வெட்கித்தலை குனிந்தான்.

www.kalviulagu.com

www.kalviulagu.com

# 15. புலியும் வழிப்போக்கனும்



ஒரு காட்டில் வேடன் ஒருவன் மிருகங்களைப் பிடிக்கப் பொறி ஒன்று வைத்திருந்தான் அப்பொறியில் சிறுத்தைப் புலி ஒன்று மாட்டிக் கொண்டது. பலவாறு முயன்று பார்த்தும் அதனால் வெளிவர முடியவில்லை. அதனால் அயர்ந்து வருத்தத்துடன் இருந்தது.

சிறிது நேரம் கழித்து அவ்வழியே குடியானவன் ஒருவன் நடந்து சென்று கொண்டிருந்தான். அருகில் வந்ததும் புலி அவனைக் கூப்பிட்டது. அவனிடம் தன்னைப் பொறியிலிருந்து விடுவிக்கும்படி

www.kalviulagu.com

Kalviulagu

TAMIIL EDUCATION WEB

சிறுவர்களுக்கான கதை
புத்தகங்களை இலவசமாக
தரவிறக்கம் செய்ய
கல்வி உலகு
இணையத்தளத்திற்குள்
பிரவேசியுங்கள்.

www.kalviulagu.com

கெஞ்சிற்று. ஆனால் குடியானவன் பயந்து சிறிது தயங்கினான். ஆனால் அவனிடம், தாங்கள் என்னை விடுவித்தால் நான் உங்களுக்கு எவ்விதத் தீங்கும் செய்ய மாட்டேன். என்று உறுதியளித்தது.

புலியின் வார்த்தைகளை நம்பிய குடியானவன் அப்புலியை பொறியிலிருந்து விடுவித்தான். ஆனால் புலி உடனே குடியானவன் மேல் பாய எத்தனித்தது. குடியானவன் அலறினான்.



அச்சமயம் அங்கு பெரிய நரி ஒன்று வந்தது அது குடியானவன் மேல் புலிபாய்வதையும் குடியானவன் அலறுவதையும் கண்டது. கூச்சலிட்டு புலியை நிறுத்தியது.

குடியானவன் நரியிடம் "ஐயா நரியாரே! நான் இவ்வழியே சென்று கொண்டிருந்தேன்.

www.kalviulagu.com

அப்பொழுது புலி இப்பொறியில் மாட்டிக் கொண்டு தவித்தது. தன்னை விடுவிக்கும்படி என்னிடம் கெஞ்சிற்று. எனக்கு எவ்விதத் தீங்கும் செய்வதில்லை என வாக்களித்தது. அதனால் அதை பொறியிலிருந்து விடுவித்தேன். ஆனால் இப்புலியோ உடனே என் மேல் பாய்ந்து கொல்ல வருகிறது. இது நியாயமா?" என்றான்.

இது கேட்ட நரி சிறிது சிந்தித்தது. பிறகு புலியிடம் "நண்பரே! குடியானவன் சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. தாங்கள் எப்படி இப்பொறியில் மாட்டிக் கொள்ள முடியும்? காண்பியுங்கள் பார்க்கலாம்" என்றது. நரியின் வார்த்தைகளை நம்பிய புலி நன்றாகப் பொறியில் மாட்டிக் கொண்டது. நரி குடியானவனிடம் "மூர்க்கருக்கு செய்யும் உதவி எப்பொழுதும் ஆபத்தில் முடியும்," என்று கூறிச் சென்றது. குடியானவனும் நரிக்கு நன்றி கூறி தன் வழியே சென்றான்.

கேள்விகள்

1. புலி எப்படி குடியானவனை கொல்ல வந்தது?

2. நரி செய்த தந்திரம் என்ன?

3. நரி கூறிய அறிவுரை என்ன?

www.kalviulagu.com

# 16. சிங்கமும் நரியும்

ஒரு காட்டில் பெரிய சிங்கம் ஒன்று இருந்தது. அது அக்காட்டில் மான், நரி, ஓநாய் முதலிய இதர மிருகங்களும் நிறைய இருந்தன. அதனால் அச்சிங்கம் தனக்குத் தேவையான போது இதர மிருகங்களைக் கொன்று தின்று வந்தது. அதனால் அது சுகமாக காலங்கழித்து வந்தது.



சில வருடங்களில் அச்சிங்கத்திற்கு வயது அதிகம் ஆகிவிட்டதால் அச்சிங்கத்தின் வலுவு குறைந்துவிட்டது. முன்போல் மிருகங்களைத் துரத்திக்கொன்று தின்ன முடியவில்லை. அதனால் அதற்கு உணவு சரிவர கிடைக்கவில்லை.

சிங்கத்திற்கு ஓர் எண்ணம் தோன்றியது. இதர மிருகங்கள் நிறைய வாழும் இடத்திற்கு அருகாமையில் ஒரு குகையில் சென்று வசித்தது. எல்லா மிருகங்களிடமும் தனக்கு வயது ஆகிவிட்டதால் இதர மிருகங்களைக் கொல்வதை நிறுத்திவிட்டதாகக்

www.kalviulagu.com

கூறியது. அவ்வழியே செல்லும் மிருகங்களை அழைத்து நண்பரே! தயவு செய்து எனது குகைக்குள் வாருவீர். நான் தங்களுக்கு எவ்விதத் தீங்கும் செய்யமாட்டேன் என்றது. சிங்கத்தின் வார்த்தைகளை நம்பிய மிருகங்கள் உள்ளே சிங்கத்திடம் சென்றன. சிங்கம் அவைகளைக் கொன்று தின்று வந்தது.



ஒரு நாள அவவழியே பெரிய நரி ஒன்று வந்தது. சிங்கம் நரியை அழைத்து அதனிடம் வழக்கம்போல் தனது குகைக்குள் அழைத்தது. ஆனால் அந்நரி சிறிது சிந்தித்தது. கீழே தரையைப் பார்த்தது. பிறகு சிங்கத்திடம், நண்பரே! தங்களது அழைப்பிற்கு வந்தனம். தங்கள் குகைக்குள் செல்லும் மிருகங்களின் காலடியெல்லாம் குகைக்குள் உள்நோக்கியே இருக்கின்றன. வெளிபுறம் நோக்கி காலடியே இல்லை. அதனால் தங்களின் வார்த்தைகளில் எனக்கு நம்பிக்கையில்லை. வருகிறேன் என்று கூறி அவ்விடம் விட்டுச்சென்றது.

www.kalviulagu.com

மற்ற மிருகங்களிடம் இவ்வுண்மையைக் கூறியது. அதனால் அன்று முதல் எல்லா மிருகங்களும் சிங்கத்திடம் செல்லாமல் எச்சரிக்கையாய் இருந்தன. சரிவர உணவு கிடைக்காததால் சிறிது நாட்களில் அச்சிங்கம் பசியால் இறந்தது.

கேள்விகள்

1. ஆகாரம் கிடைக்க சிங்கம் செய்த உபாயம் என்ன?

2. நரி எவ்வாறு சிங்கத்தினிடமிருந்து தப்பியது?

www.kalviulagu.com

# 17. குடியானவனும் நரியும்

ஒரு கிராமத்தில் குடியானவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு நிறைய வயல்கள் இருந்தன அதைத் தவிர அவனிடம் நிறைய ஆடு, மாடு, கோழி, வாத்து முதலியனவும் இருந்தன.

குடியானவனின் வீட்டிற்கு அருகாமையில் உள்ள காட்டில் நரி ஒன்று இருந்தது. அது குடியானவனின் கோழி, வாத்து, ஆட்டுக்குட்டி முதலியவைகளை அடிக்கடி திருடிச் சென்று கொன்று தின்று வந்தது. அதனால் குடியானவன் எப்படியேனும் அந் நரியைப் பிடித்துக் கொல்ல நினைத்தான். பலமுறை முயன்றும் பயனில்லை. கடைசியாய் ஒரு பெரிய பொறி வைத்தான். நரியும் அப்பொறியில் அகப்பட்டுக் கொண்டது.



www.kalviulagu.com

பொறியில் நரியைக் கண்ட குடியானவன் அதைக் கொல்லவில்லை. அதை வெளியில் எடுத்து அதன் வாலில் எண்ணெய் தோய்த்த கந்தல் துணியைச் சுற்றினான். பிறகு அத்துணிக்குத் தீ வைத்து, அதை வெளியே விட்டான்.

பயந்து நடுங்கிய நரி வெகுண்டு அங்கிருந்து வேகமாய் வாலின் தீப்பந்தத்துடன் குடியானவனின் வயலில் புகுந்து ஓடியது.

அச்சமயம் குடியானவனின் வயலில் கதிர்கள் முற்றி நெல் அறுவடைக்குத் தயாராய் இருந்தது. வைக்கோலும் நன்றாய் உலர்ந்திருந்தது. அதனால் நரியின் வாலிலுள்ள தீச்சுவாலைபட்டதும் பற்றிக் கொண்டு எரிய ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் அக்குடியானவனின் வயலில் இருந்த நெற் பயிர்கள் முழுவதும் எரிந்து சாம்பலாயின.

இதைக் கண்டு குடியானவன் தனது முட்டாள் தனத்தை நினைத்து வருந்தினான்.

கேள்விகள்

1. ஏன் நரியை பிடித்துக் கொல்ல குடியானவன் விரும்பினான்?

2. பொறியில் அகப்பட்ட நரியை குடியானவன் என்ன செய்தான்?

3. குடியானவன் செய்த முட்டாள் தனம் என்ன?

www.kalviulagu.com

# 18. ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் அழிவே

ஒரு எளிய காட்டின் அருகே பெரிய புல்வெளி ஒன்று இருந்தது. அங்கு நிறைய மாடுகள் வசித்து வந்தன. அவைகள் எப்பொழுதும் சேர்ந்தே புல்மேயும். அதனால் வயிறார உண்டு கொழுத்து இருந்தன.

அருகிலுள்ள காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது. அதற்கு இம்மாடுகளைக் கொன்று தின்ன ஆவல். பலமுறை முயன்றும் முடியவில்லை. எல்லா மாடுகளும் ஒன்று சேர்ந்து சண்டையிட்டு சிங்கத்தைத் துரத்தி வந்தன. அதனால் சிங்கத்தால் அவைகளின் அருகில் நெருங்க முடியவில்லை.



www.kalviulagu.com

சில மாதங்கள் கழித்து அம்மாடுகள் தமக்குள் முட்டிக் கொண்டு சண்டையிட ஆரம்பித்தன. அதனால் அவற்றின் ஒற்றுமை குலைந்தது. அவைகள் தனித் தனியே மேய ஆரம்பித்தன.



சமயம் எதிர்பார்த்திருந்த சிங்கம் இதைக் கண்டது. உடனே மாடுகளை ஒவ்வொன்றாகத் தாக்கிக் கொன்று தின்றது. சில நாட்களில் அங்கிருந்த எல்லா மாடுகளும் அச்சிங்கத்திற்கு இரையாயின.

தமக்குள் ஒற்றுமை இழந்ததால் எல்லா மாடுகளும் அழிந்தன.

கேள்விகள்

1. முதலில் சிங்கத்தால் ஏன் அம்மாடுகளை கொல்ல முடியவில்லை?

2. தங்களுக்குள் சண்டை இட்டதால் மாடுகளுக்கு என்ன ஏற்பட்டது?

3. இப்பாடத்தின் கருத்து என்ன?

www.kalviulagu.com

# 19. காகமும் பாம்பும்



ஒரு பெரிய மரத்தில் காகம் ஒன்று கூடுகட்டி வசித்தது. அக் கூட்டில் முட்டைகள் இட்டு வந்தது. அம்மரத் தினடியில் பொந்தில் நாகப் பாம்பு ஒன்று இருந்தது. அப்பாம்பு காகத்தின் முட்டை களைத் தின்று வந்தது. அதனால் காகம் வருத்தமுற்றது. இவ்வாறு பலமுறை நடந்தது. அதனால் காகம் எவ்வழியேனும் அப்பாம்பைக் கொல்ல நிச்சயித்தது.



ஒரு நாள் அதற்கு ஓர் உபாயம் தோன்றிற்று. அருகில் அரசரது அரண்மனை இருந்தது. காகம் அரண்மனைக்கு பறந்து சென்றது. அரசி குளிக்கும் போது சுழற்றி வைத்திருந்த முத்து மாலையைக் கண்டது. அதை தன் அலகால் எடுத்து பறந்து சென்றது.

www.kalviulagu.com



அதைக் கண்ட அரசி கூச்சலிட்டாள். உடனே அரண்மனையிலிருந்த வேலையாட்கள் கையில் தடியுடன் அக்காகத்தைத் துரத்திச் சென்றனர்.

காகம் பறந்து சென்று அந்த முத்து மாலையை நாகப்பாம்பின் பொந்தில் போட்டது. துரத்தி வந்த ஆட்கள் இதைக் கண்டனர். அப்பொந்தில் தடியால் குத்தினர். நாகப்பாம்பு சீறி வெளிவந்தது. உடனே அவர்கள் தடியால் அப்பாம்பை அடித்துக் கொன்றனர். பொந்திலிருந்த முத்து மாலையை எடுத்து சென்றனர்.

அன்று முதல் காகம் பாம்பின் தொல்லை யிலிருந்து விடுபட்டது.

www.kalviulagu.com

# 20. ஒற்றுமையே வலிமை

ஒரு கிராமத்தில் குடியானவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு மூன்று பையன்கள் இருந்தனர். அவர்கள் எப்பொழுதும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். இதைக் கண்ட குடியானவன் மிக வருத்தமுற்றான்.



குடியானவனுக்கும் வயது அதிகம் ஆயிற்று. ஒரு சமயம் உடம்பு முடியாமல் இருந்தான். அப்பொழுது தனது பையன்களை அருகில் அழைத்தான். அவர்களுக்கு பல அறிவுரைகள் கூறினான். அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை.

சிறிது சிந்தித்தான். பிறகு பையன்களில் ஒருவனை அழைத்து சில மெல்லிய குச்சிகள் கொண்டு வரச் சொன்னான். அவனும் அதை எடுத்து வந்தான். அவற்றை ஒரு கட்டாகக்

www.kalviulagu.com

கட்டினான். அவர்களை ஒவ்வொருவராக அழைத்தான். அக்குச்சிக்கட்டைகளை கொடுத்து அதை முறிக்கச் சொன்னான். ஒருவராலும் அக்கட்டைகளை முறிக்க முடியவில்லை.


பிறகு கட்டை அவிழ்த்து குச்சிகளை தனியே பிரித்தான். அதை அவர்களிடம் கொடுத்து முறிக்கச் சொன்னான். அவர்கள் எல்லாக் குச்சியையும் தனித்தனியே சுலபமாக இரண்டாய் முறித்தனர்.



குடியானவன் உடனே அவர்களிடம். "நீங்கள் சேர்ந்து ஒற்றுமையுடன் இருந்தால் எவரும் உங்களுக்கு எவ்விதத் தீங்கும் செய்ய முடியாது. உங்களுக்குள் சண்டையிட்டால் சுலபமாக உங்களைப் பிரித்து தீங்கிழைப்பர்" என்று கூறினார். இது கேட்ட பையன்களுக்கு புத்தி வந்தது. அன்று முதல் தமக்குள் சண்டையிடாமல் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். குடியானவனும் நிம்மதியாக வாழ்ந்து வந்தான்.

www.kalviulagu.com

# 21. குரங்கு அரசன்



ஒரு காட்டில் நிறைய மிருகங்கள் இருந்தன. எல்லா மிருகங்களும் இருந்தன.

ஒரு சமயம் எல்லா மிருகங்களும் ஒன்று கூடின. தமக்குள் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுக்க நிச்சயித்தன. பல வகைகளில் சாமார்த்தியம் உள்ள தலைவனை தேர்ந்தெடுக்கத் தீர்மானித்தன. ஒவ்வொரு மிருகமும் தனியே முன் வந்து தனது வேலைகளைக் காண்பித்தது. பெரிய குரங்கு ஒன்று நன்றாய் குதித்து நாட்டியம் ஆடியது. மற்ற பல விளையாட்டும் செய்து காண்பித்தது. இதைப் பார்த்து எல்லா மிருகங்களும் அக்குரங்கை தமது

www.kalviulagu.com

தலைவனாக்க நிச்சயித்தன. ஆனால் ஒரு நரி மாத்திரம் குரங்கு தலைவனாவதை விரும்பவில்லை.

அன்று முதல் அம் மிருகங்களுக்கு அக்குரங்கு தலைவனாயிற்று.

நரி எவ்வகையிலேனும் குரங்கை அவமானப் படுத்த நினைத்தது.


ஒரு நாள் ஒரு பொறியில் அக் குரங்கிற்கு மிக விருப்பமான தின்பண்டங்களை வைத்தது. குரங்கை அவ்விடம் அழைத்துச் சென்றது. பொறியில் தின் பண்டங்களைக் கண்டதும், குரங்கு தன்னை மறந்து அவைகளை எடுக்க நினைத்தது. உடனே அப்பொறியில் மாட்டிக் கொண்டது. நரியும் குதூகலத்துடன் கூக்குரலிட்டது. நரியின் கூச்சலைக்கேட்ட மற்ற மிருகங்களும் அங்கு வந்தன. தமது தலைவன் குரங்கு, பொறியில் மாட்டிக் கொண்டிருப்பதைக் கண்டன. வரும் ஆபத்தினை உணராத தலைவனை அவைகள் விரும்பவில்லை. அன்று முதல் குரங்கு தமக்குத் தலைவனாக இருப்பதை அவைகள் விரும்பவில்லை.

நரியும் தனது எண்ணம் பலித்தது கண்டு ஆனந்தம் கொண்டது.

www.kalviulagu.com

# 22. கழுதையும் நிழலும்

காசி என்றொரு கிராமவாசியிடம் பெரிய கழுதை ஒன்று இருந்தது. அதை அவன் தினமும் அருகிலுள்ள சந்தைக்கு ஓட்டிச் சென்று அங்கு சுமை ஏற்றி கூலிசம்பாதித்து வந்தான். சில நாட்கள் கழுதையை மற்றவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து வந்தான்.



ஒரு நாள மாசி என்ற ஒரு கிராமவாசி காசியிடமிருந்து கழுதையை வாடகைக்கு எடுத்து ஓட்டிச் சென்றான், அவனுடன் காசியும் கூடச் சென்றான். இருவரும் அருகிலுள்ள சந்தைக்கு கழுதையுடன் சென்றனர். அப்பொழுது நல்ல கோடைக் காலம். அதனால் வெய்யில் அதிகமாய் இருந்தது. வழியில் மரம் எதுவும் இல்லாததால் நிற்க நிழல் எதுவும் இல்லை. வெய்யிலின் கொடுமை தாங்காமல் இருவரும் மிக்க அவதியுடன் நடந்து சென்றனர்.

www.kalviulagu.com



திடீரென்றுகாசிக்கு ஓர் எண்ணம் உதித்தது. தான் கழுதையின் நிழலில் உட்கார்ந்து இளைப்பாற நினைத்தான். அந்நிழலில் ஒருவருக்குத்தான் இடம் இருந்தது. அதனால் மாசி அவனைத் தடுத்து நிறுத்தினான்.

உடனே காசி, மாசியிடம், "கழுதை என்னுடையது அதனால் அதன் நிழலில் உட்கார எனக்குத் தான் உரிமை உண்டு" என்றான். அதற்கு மாசி இன்று உன் கழுதையை வாடகைக்கு எடுத்திருப்பதால் இன்று அந்நிழலில் உட்கார எனக்குத்தான் உரிமை உண்டு" என்று கூறினான். இருவரும் பேச்சுமுற்ற அடிதடிச் சண்டையில் இறங்கினர். கையிலிருந்த தடியால் அடித்துக் கொண்டனர். தற்செயலாககாசியின் ஓர் அடி கழுதையின் மேல் விழுந்தது. அதனால் வெகுண்ட கழுதை அங்கிருந்து வேகமாய் ஓட்ட மெடுத்தது அதனால் கழுதையின் நிழலும் இல்லாமல் போயிற்று.

காசியும் மாசியும் தமது முட்டாள் தனத்தை நினைத்து வருத்தமுற்றனர். அலைந்து திரிந்து தேடிப் பிடித்து கழுதையை ஓட்டிச்சென்றனர்.

www.kalviulagu.com

# 23. கழுகும் காகமும்

பெரிய கழுகு ஒன்று ஒரு மலையடி வாரத்தில் மரத்தில் வசித்து வந்தது. அங்குநிறைய புல்வெளி கூட்டமாய் தினமும் ஆடுகள் மேய வரும். சிறு ஆட்டுக் குட்டிகளும் கூட வரும்.

ஒரு நாள் ஆட்டுக் கூட்டத்தின் நடுவில் சிறு ஆட்டுக் குட்டியைக் கண்டது. திடீரென்று பறந்து சென்று அந்த ஆட்டுக் குட்டியைக் கவ்வி எடுத்துச் சென்றது. ஆடு மேய்ப்பவன் பலவாறு முயன்றும் அக்குட்டியை மீட்க முடியவில்லை. பருந்தும் ஆட்டுக் குட்டியை கொன்று தின்றது.



www.kalviulagu.com



நடந்தவற்றை எல்லாம் ஒரு காகம் கவனித்துக் கொண்டிருந்தது. தானும் அவ்வாறு ஆட்டுக் குட்டியைக் கவ்வி எடுத்துச் செல்ல நினைத்தது. உடனே பறந்து சென்று ஓர் பெரிய ஆட்டுக் குட்டியின் மேல் உட்கார்ந்தது. பிறகு அதைத் தன் கால்களால் தூக்கிச் செல்ல முயன்றது. பலமாக முயன்றும் முடியவில்லை. ஆனால் அதன் கால்களின் நகங்கள் ஆட்டின் மேலுள்ள ரோமத்தில் நன்றாகச் சிக்கிக் கொண்டன. அதனால் அது பறந்து செல்ல முடியவில்லை.

ஏற்கனவே ஒரு குட்டியை இழந்த ஆடு மேய்ப்பவன் மிகவும் சினத்துடன் இருந்தான். ஆட்டின் மேல் காகத்தைக் கண்டதும் ஓடி வந்து அக்காகத்தை அடித்துக் கொன்றான்.

கேள்விகள்

1. காகம் எதனால் ஆட்டின் மேல் உட்கார்ந்தது?

2. காகத்திற்கு ஏற்பட்ட கதி என்ன?

www.kalviulagu.com

# 24. ஓநாயும் கொக்கும்

ஒரு காட்டில் பெரிய ஓநாய் ஒன்று இருந்தது. ஒரு நாள் அது ஒரு ஆட்டுக் குட்டியைக் கொன்று தின்றது. அப்பொழுது ஆட்டின் எலும்பு ஒன்று அதன் தொண்டையில் சிக்கிக் கொண்டது. ஓநாய் பல வகையில் முயன்றும், எலும்பு வெளிவரவில்லை. அதற்கு வலி அதிகம் ஆயிற்று. அதனால் வெகு துன்பம் அடைந்து இங்குமங்கும் அலைந்தது. பல பிராணிகளிடம் உதவி கோரியது. ஒன்றும் நடக்கவில்லை.



பிறகு ஒரு குளத்தில் கொக்கு ஒன்றைக் கண்டது. அதை அணுகி தனது துன்பத்தை தெரிவித்தது. தனது தொண்டையில் உள்ள எலும்பை எடுத்து உதவினால் நல்ல வெகுமதி அளிப்பதாகக் கூறியது.

கொக்கு உடனே தனது நீண்ட அலகால் ஓநாயின் தொண்டையில் மாட்டிக் கொண்டிருந்த எலும்பை சுலபமாக வெளியில் எடுத்துப்போட்டது. ஓநாயின் துன்பமும் குறைந்தது.

பிறகு கொக்கு ஓநாயிடம் தனது உதவிக்கு வெகுமதி கேட்டது. அதற்கு ஓநாய் கொக்கைப் பார்த்து நண்பரே தங்களது அலகு என்வாயினுள் இருக்கும்போது அதைக் கடிக்காமல் இருந்ததே உமக்கு பெரிய வெகுமதி என்று கூறி அவ்விடமிருந்து ஓடியது.

www.kalviulagu.com

# 25. குரங்கும் கழுதையும்

ஓர் ஊரில் வண்ணார் ஒருவர் இருந்தார். அவர் தினமும் காலையில் துணிகளை மூட்டை கட்டி தனது கழுதை மேல் போட்டு ஆற்றிற்குச் செல்வார். அங்கு துணிகளைத் துவைத்து உலர்த்தி மாலையில் கழுதையுடன் வீடு திரும்புவார்.

அவர் தினமும் மதிய உணவுக்காக சோறு எடுத்துச் செல்வது வழக்கம். ஆற்றங்கரையை அடைந்ததும் கழுதை அங்கு அலைந்து மேய்ந்து வரும்.



ஒரு நாள் அவர் அவ்வாறு ஆற்றிற்குச் சென்று துணி துவைத்துக் கொண்டிருந்தார். கழுதை அருகில் மேய்ந்து கொண்டிருந்தது. அச்சமயம் பெரிய குரங்கு ஒன்று அங்கு வந்தது. அங்கு இருந்த சோற்று மூட்டையை அவிழ்த்து சோற்றைத் தின்றது. பிறகு தனது சோற்றுக்கையை அருகிலிருந்த கழுதையின் வாயில் தடவியது. அதனால் கழுதையின் வாயின் வெளிப்புறம்

www.kalviulagu.com

சோற்றுப் பருக்கைகள் ஒட்டிக் கொண்டன. குரங்கு அருகிலிருந்த மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டது.

நடுப்பகல் ஆனதும் அவ்வண்ணார் உணவு உண்ண நினைத்தார். ஆனால் சோற்று மூட்டையில் சோறு இல்லை. காலியாக இருந்தது. ஆச்சரியத்துடன் அருகிலிருந்த கழுதையைப் பார்த்தார். அதன் வாயில் சோற்றுப் பறுக்கைக ளைக் கண்டார். கழுதை தான் தனது சோற்றைத் தின்று விட்டதாக நினைத்தார். ஒரு பெரிய கழிகொண்டு கழுதையை நையப்புடைத்தார். கழுதையும் வீறிட்டு அலறிக் கொண்டு அங்கிருந்து வேகமாய் ஓடியது. தற்செயலாய் வண்ணார் மரத்தின் மேல் இருக்கும் குரங்கைக் கண்டார். உடனே தனது தவறை உணர்ந்தார். தனது அவசர புத்தியால் கழுதையை அடித்ததற்கு மிக வருந்தினார்.

www.kalviulagu.com

## 14

### கேள்விகள்

1. கரடியிடமிருந்து சோமு எப்படி தப்பினான்?

2. இராமுவிடம் சோமு கரடி என்ன கூறியதாகக் கூறினான்?

## 19

### கேள்விகள்

1. காகம் பாம்பை எவ்வழியேனும் கொல்ல வேண்டும் என ஏன் நிச்சயித்தது?

2. பாம்பு எவ்வாறு கொல்லப்பட்டது?

## 20

### கேள்விகள்

1. குடியானவன் வருத்தமுறக் காரணம் என்ன?

2. குடியானவன் தனது பையன்கள் ஒற்றுமையாக இருக்க கையாண்ட உதாரணம் என்ன?

www.kalviulagu.com

## 21

### கேள்விகள்

1. குரங்கு எவ்வாறு தலைவனாக தேர்ந்தெடுக்கப்பட்டது?

2. நரி செய்த தந்திரம் என்ன?

3. குரங்கு தலைவனாக இருப்பதை ஏன் மற்ற மிருகங்கள் விரும்பவில்லை?

## 22

### கேள்விகள்

1. காசியும் மாசியும் எதற்காக சண்டையிட்டுக் கொண்டனர்?

2. எப்போது அவர்கள் தங்களது முட்டாள்தனத்தை உணர்ந்தனர்?

## 24

### கேள்விகள்

1. ஓநாய் கொக்கிடம் என்ன உதவி கேட்டது?

2. ஓநாய் கூறிய பதில் என்ன?

www.kalviulagu.com

# மாணவர்

# கதைக் களஞ்சியம்



அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

Printed by Gowriy printers